1990 ஆகஸ்ட் 21]

கன்னியாகுமரி பார்டரிலே எல்லாம் எங்கள் கிராமங்கள் வருகின்றன. இப்படிப்பட்ட பகுதிகளிலேயிருந்து வருகின்றவர்களுக்கு எல்லாம் இந்த கிலோ மீட்டர் கணக்கு தடையாக இருக்கிற காரணத்தால், ஜனத்தொகை, மாத வருமானம் இதையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு, இதை நகரப் பேருந்துகளை இயக்கும் மையமாக நீங்கள் நிச்சயமாக ஆக்கவேண்டும் என்ற வேண்டுகோளை எனது தொகுதி மக்கள் சார்பாக அரசுக்கு வைக்கிறேன். ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இந்தக் கோரிக்கையைப் பரிசீலிக்கும்.

கம்பம்-சென்னைக்குக் குளிர் சாதனம் பொருத்தப்பட்ட பேருந்து விடுதல்.

* 9367 திரு. நா. இராமகிருஷ்ணன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கம்பம்-சென்னைக்குக் குளிர் சாதனம் பொருத்தப்பட்ட பேருந்து விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இல்லை.

9-35 மணி

திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பத்திலிருந்து சென்னைக்கு 400 மைல்களுக்கு மேலாக பயணிகள் பயணம் செய்வதால், கோடைகாலத்தில் அதிகமான வெப்பத்தால் தாக்குண்டு, பயணிகள் அவதியுறுகிறார்கள். அந்தப் பயணிகளின் கஷ்டத்தை உணர்ந்தாவது கம்பத்திலிருந்து சென்னைக்கு கோடை காலத்தில் மட்டும் குளிர்சாதனம் பொருத்தப்பட்ட பேருந்து விடமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, சென்னையிலேயிருந்து கம்பம் வரை 2 குளிர்சாதனப் பேருந்துகள் இயக்கப்பட்டன. போதுமான அளவிற்கு வசூல் இல்லாத காரணத்தினால்தான் அந்தப் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே தற்போதைய சூழ்நிலையில் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.